# 60

# "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா"

## (19:11-21)

*நமது முந்திய பாடமானது ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தைச் சுற்றிச் சுழன்றது: "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" (19:7); "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" (19:9). இவ்விதமாக நாம், "இதோ, மணவாளன் வருகிறார்" (மத்தேயு 25:6;* KJV*) என்ற கூவுதலுக்கு - மற்றும் ஒளிவீசும் திருமண உடையில் கிறிஸ்து தரிசனமாகுதலுக்கு - மனரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் தயாராக இருக்கின்றோம். இயேசு தரிசனமாகின்றார், ஆனால் - வெளிப்படுத்தின விசேஷத்தில் அடிக்கடி நடப்பது போல் - நாம் எதிர்பார்க்கின்றபடி அல்ல. மணவாளன் என்பவரல்ல, ஆனால் யுத்தம் செய்யும் அரசரே காட்சியில் வருகின்றார்:*

> *பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. ... புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். **ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா** என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது (19:11-16).*

*ஒரு தரிசனத்தினால் விடப்பட்டுள்ள முற்றான மனப்பதிவு மிகவும் முக்கியமானது என்று சற்று நேரத்திற்கு முன்புதான் நான் உங்களுக்கு நினைவூட்டியிருந்தேன். 11முதல் 21வரையுள்ள வசனப்பகுதியை*

*வாசிப்பதற்குச் சற்று நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். அந்த வசனங்களை வாசிக்கும்போது உங்கள் சிந்தைக்கு வரும் வார்த்தைகள் என்ன? உங்கள் பதில் எதுவாயிருந்தாலும், அது அனேகமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, "வெற்றி" என்ற வார்த்தையுடன் உறவுபட்டிருக்கும். இவ்வசனப்பகுதியானது வெற்றியைப் பற்றியதாக உள்ளது: கிறிஸ்துவின் விரோதிகள்மேல், மற்றும் கிறிஸ்தவத்தின் மீதான வெற்றி - குறிப்பாக, மிருகம் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசி (வசனங்கள் 19, 20) மற்றும் அவர்களின் கூட்டாளிகள் (வசனம் 21) ஆகியோரின் மீதான வெற்றி.*

*ஆட்டுக்குட்டியானவரின் விரோதிகள் பின்வரும் முறைமைப்படி அறிமுகப்படுத்தப்பட்டனர்: (1) வலுசர்ப்பம் (12:3), (2) கடலில் இருந்து வந்த மிருகம் மற்றும் நிலத்தில் இருந்து வந்த மிருகம் (13:1, 11), மற்றும் (3) மகா பாபிலோன் (14:8; 16:19; 17:1, 5). இவைகள் இதற்கு நேர் எதிர் வரிசையில் ஒழிக்கப்படுவதை நாம் காணுகின்றோம்: (1) 17 மற்றும் 18ம் அதிகாரங்களில் பாபிலோன், (2) 19ம் அதிகாரத்தில் இரண்டு மிருகங்களும், மற்றும் (3) 20ம் அதிகாரத்தில் கடைசியாக வலுசர்ப்பம்,[1] பாபிலோனின் வீழ்ச்சியைக் கண்டுள்ள நாம், 12ம் அதிகாரத்தில் வெற்றிகொள்ளப்பட முடியாதவைகளாய்க் காணப்பட்ட பயங்கரமான மிருகங்களின் அழிவைக் காண்பதற்குத் தயாராயிருக்கின்றோம். முதல் மிருகம் "நாசமடையப் போகிறது" என்று முன்பே முன்னறிவிக்கப்பட்டிருந்தது (17:8; 17:11ஐயும் காணவும்), மற்றும் இப்பாடத்தில் நாம், அந்த முன்னுரைத்தல் உண்மையாவதைக் காண்போம் (19:20).*

*இந்தப் பாடத்திற்கு, 19:11-21 நமது வசனப்பகுதியாக உள்ளது. இரு மிருகங்களும் தூக்கியெறியப்படுதலைச் சித்தரித்தல் என்பதே இவ்வசனப்பகுதியின் நோக்கமாக உள்ளது, ஆனால் அவற்றிற்கு அழிவைக் கொண்டுவந்தவர் மீதுதான் வலியுறுத்தம் உள்ளது: ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும். ஜேம்ஸ் எஃபர்டு என்பவர் குறிப்பிட்டபடி, "இவ்விடத்தில் எழுத்தாளர், நியாயத்தீர்ப்பு எவ்வாறு நடைபெற வேண்டியிருக்கிறது என்பதை அல்ல, ஆனால் அதற்குப் பொறுப்பாய் இருப்பவர் யார் என்பதை விவரிக்கவே முயற்சி செய்துள்ளார்."[2]*

## அவரது அதிகாரம் முழுமையானதாக உள்ளது (19:11-16)

*யோவான், "பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்" என்று கூறித் தொடங்கினார் (வசனம் 11அ). தேவன் தமது அரியணையில் வீற்றிருப்பதை வெளிப்படுத்தப் பரலோகத்தில் ஒரு கதவு முன்பு திறந்திருந்தது (4:1, 2), ஆனால் இந்தத் தரிசனத்திற்கு, கதவு அளவிலான காட்சி போதாததாக இருந்தது. கிறிஸ்துவை அவரது வல்லமையிலும் மகிமையிலும் வருவதை அப்போஸ்தலர் காணும்படிக்குப் பரலோகம் முழுவதும் இப்போது திறந்திருந்தது.*

*வில்லியம் பார்க்ளே என்பவர், "இவ்விடத்தில் வெற்றிபெறும் கிறிஸ்து உதயமாகுதல் என்ற, வெளிப்படுத்தின விசேஷத்தின் மிகவும்*

நாடகத்துவமான கணங்களில் ஒன்றுள்ளது"[3] என்று எழுதினார். G. R. பீஸ்லே - முர்ரே என்பவர், "இவ்வசனப்பகுதியில் கர்த்தருடைய வருகை பற்றிய விவரிப்பானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலேயே மிகவும் வல்லமை நிறைந்த மற்றும் மனதில் பதிகின்ற சித்தரிப்புகளில் ஒன்றாக உள்ளது"[4] என்று கூறினார்.

பரலோகம் திறந்தபோது, யோவான் "ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவ ரென்னப்பட்டவர்" (வசனம் 11ஆ) என்ற காட்சியைக் கண்டார். 6:2ல் வெள்ளைக் குதிரையின் மீது ஏறியிருந்தவரின் அடையாளம் பற்றி முரண்பாடான கருத்துக்கள் இருக்கலாம்,[5] ஆனால் 19ம் அதிகாரத்தில் வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவரைப் பற்றி முரண்பாடான கருத்துக்கள் எதுவும் இருப்பதில்லை. இவர் இயேசுவே என்பது உலகளாவிய வகையில் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது: இவர் இயேசுவின் தோற்றம் கொண்டிருந்தார் (வசனங்கள் 12, 15) மற்றும் இயேசுவின் பட்டப்பெயர்களைக் கொண்டிருந்தார் (வசனங்கள் 11, 13, 16). ("உண்மையும் சத்தியமுமுள்ளவரான இயேசு வெள்ளைக் குதிரையின்மீதேறி வருதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இப்பகுதியில் உள்ள விவரிப்புச் சொற்றொடர்களில் பெரும்பான்மை யானவை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படக்கூடும். 6ம் அதிகாரத்தில் குதிரையில் ஏறி இருந்தவர்போன்று இயேசுவும் வெள்ளைக் குதிரையில் ஏறியிருந்தார், ஏனென்றால் "வெள்ளைக்குதிரை என்பது வெற்றிகொள்பவரின் அடையாளமாக உள்ளது, ... ரோமப்படைத் தளபதியொருவர் வெற்றியைக் கொண்டாடும் போது வெள்ளைக் குதிரையில் ஏறிச் செல்வார்."[6]


முன்னதாக, இயேசு "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி" என்று அழைக்கப்பட்டிருந்தார் (3:14).[7] இவ்விடத்தில் அவர் "உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்" என்று அழைக்கப்பட்டார் (வசனம் 11ஆ). ஏனென்றால் அவர் தமது நம்பப்படத்தக்கத்தன்மையையும் (மக்கள் அவர்மீது) சார்ந்திருக்கக்கூடிய தன்மையையும் செயல்விளக்கப்படுத்தினார்: அவர் நீதிமான்களுக்குப் பலன் அளிக்கவும் துன்மார்க்கரை நியாயந்தீர்க்கவும் திரும்பி வரப்போவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார், அவர் அந்த வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொண்டிருந்தார்.

நமது வசனப்பகுதியில் உள்ள அடுத்த கூற்றானது, வருதலில் அவரது நோக்கத்தை வலியுறுத்துகிறது: "அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்" (வசனம் 11இ). அவர் முதல்முறை நமது இரட்சகராக வந்தார்; அவர் இரண்டாம் முறை நமது நியாயாதிபதியாக வருவார். தனிப்பட்ட முன் எண்ணத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு, வெகுஜனக் கருத்தினால் அலைபாய்ந்து, சிலவேளைகளில் பொருளாசை யால்கூட பாதிக்கப்படும் இவ்வுலக நியாயாதிபதிகளுக்கு நேர்மாறான வகையில், இயேசு நீதியும் நியாயமுமான நியாயத்தீர்ப்புகளை வழங்குவார்.

இவ்விடத்தில் காட்சியில் உள்ளது என்ன என்ற கேள்விக்குப் பதில் அளிக்க நாம் மீண்டும் இவ்விடத்தில் தாமதிக்க வேண்டும்: இந்தக் காலத்தின்

முடிவில் இரண்டாவது வருகையா அல்லது முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் விரோதியை (வேறு வார்த்தையில் கூறுவதென்றால், ரோமப்பேரரசை) தண்டிப்பதற்குக் கர்த்தரின் வருகையா என்பதே. இவற்றில் இரண்டாவது கூறப்பட்டதே வெளிப்படுத்தின விசேஷத்தை முதன்முதலில் படித்தவர்களுக்குச் செய்தியாக இருந்திருக்கும் என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்க முடியும்: (1) முன்பே குறிப்பிட்டபடி, யோவானின் நாட்களில், இரு மிருகங்களும் ரோமப்பேரரசு (அல்லது பேரரசன்) மற்றும் பேரரச வணக்கத்தை அமுல்படுத்திய முகமைகள் ஆகிய இரு சாராரையும் பிரதிநிதித்துவப்படுத்தின. (2) துன்மார்க்கத்தின் அழிவு என்பதல்ல, ஆனால் ரோமாபுரியின் வீழ்ச்சி என்பதே இதன் தொடக்ககால வாசகர்களின் உடனடி கவனமாயிருந்திருக்கும். (3) வசனப்பகுதியில் நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்துதல் ("நியாயந்தீர்த்து" மற்றும் "யுத்தம்பண்ணுகிறார்") என்பது, தொடர்புடைய செயல் தொலைதூர எதிர்காலத்தில் அல்ல, ஆனால் உடனடியாக நடைபெறுவது என்று கருத்துத் தெரிவிப்பதாயிருக்கிறது.

இருப்பினும், மீண்டும் ஒருமுறை, உடனடி "மலை உச்சி" என்பது நிறைவான "மலை உச்சி" என்பதுடன் ஒன்றுகலந்து தெரிகிறது.[8]




இவ்வசனப்பகுதியானது கிறிஸ்தவத்தின் குறிப்பிட்ட விரோதிகளைக் கண்ணோக்கில் கொண்டிருக்கலாம், ஆனால் கர்த்தருடைய எந்த விரோதியும், அவன் எவ்வளவு பலம் வாய்ந்தவனாக இருப்பினும், அவரது வல்லமைக்கு எதிராக நிற்க முடியாது என்பதுதான் ஒவ்வொரு தலைமுறையிலும் வாசகர்களுக்கான மாற்றமில்லாத பாடமாக உள்ளது. அவரை எதிர்த்து நிற்கும் யாவரும் கடைசியில் அழிவார்கள். எனவே ஒரு கருத்தில், 19:11-17 வசனப்பகுதியானது, இரண்டாம் வருகை பற்றி, 2 தெசலோனிக்கேயர் 1:7-9 போன்ற மாபெரும் வசனப்பகுதிகளுக்கு இணையாக விளங்குகிறது.

இப்போது நாம் நமது வசனப்பகுதிக்குத் திரும்புவோம்: 1:14ல் போன்றே, இயேசுவின் கண்கள், ''அக்கினி ஜுவாலை'' என்று இவ்விடத்திலும் விவரிக்கப்பட்டன (19:12அ).[9] அவரது காட்சியில் இருந்து எதுவும் மறைக்கப்பட முடியாது. நியாயாதிபதியானவர் தவறற்ற நீதியுடனும் நியாயத்துடனும் இருக்க வேண்டும் என்றால் எல்லாம் அறிந்த தன்மை என்பது அவசியமானதாக உள்ளது.

அடுத்துத் தரப்படும் விபரம் புதிதானதாக உள்ளது: "அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன" (வசனம் 12ஆ). முன்பு இயேசு,

*வெற்றியின் கிரீடம் ஒன்றை அணிந்திருந்ததாக விவரிக்கப்பட்டார்* (the *stephanos*; 14:14), *ஆனால் இப்போது முதன்முறையாக அவர், ஆட்சிசெய்யும் கிரீடம்* (the *diadema*) *அணிந்துள்ளதாக விவரிக்கப் படுகின்றார். மேலும், அவர் ஒரு கிரீடம் அல்ல, ஆனால், "பல" கிரீடங்கள் அணிந்திருந்தார். ஆட்சியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை ஆண்டால், அவர்கள் பல கிரீடங்களை அணிவது என்பது சாதாரண வழக்கமாக இருந்தது.[10] வலுசர்ப்பமும் கடல் மிருகமும்கூட பல கிரீடங்களைக் கொண்டிருந்தன (12:3; 13:1), ஆனால் அவற்றின் ஆளுகையானது இரண்டாம் நிலையை சேர்ந்ததாகவும் குறுகிய - காலம் கொண்டதாகவும் இருந்தது. கிறிஸ்து ஒருவரே "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்" கொண்டவராக இருக்கின்றார் (மத்தேயு 28:18).*

*11ம் வசனம் இயேசுவை "உண்மையும் சத்தியமுமுள்ளவர்" என்று குறிப்பிட்டது. 12ம் வசனம் ஒரு இரண்டாம் குறிப்புப் பெயரைக் கொடுக்கிறது: "அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும்* [*அவர்மீது*[11]] *எழுதியிருந்தது"*[12] *(வசனம் 12இ). பழங்கால உலகில், ஒரு பெயர் என்பது அந்தப் பெயரையுடைய தனிநபரின் இயல்பை - அதாவது அந்த நபர் யார் மற்றும் அவர் என்னவாக இருந்தார் என்பது போன்றவற்றை வெளிப்படுத்திற்று. ஆகையால்* J. W. *இராபர்ட்ஸ் என்பவர், இயேசுவின் இந்த இரகசியப் பெயரானது "அவரது இருப்பு மற்றும் இயல்பு ஆகியவற்றின் நிறைவான இரகசியம்"*[13] *என்று கூறியது அனேகமாக சரியானதாகவே இருக்கிறது. இயேசுவைப் பற்றி அறிய வேண்டிய ஒவ்வொன்றையும் நாம் அறிய இயலாது, அதிலும் குறிப்பாக நாம் மாம்சத்தில் இருக்கையில் அவரைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் நாம் முற்றிலுமாக அறிய இயலாது.*

*அடுத்ததாக, இயேசு "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட*[14] *வஸ்திரத்தைத் தரித்திருந்தார்" என்று நமக்குக் கூறப்படுகிறது (வசனம் 13அ). இது இயேசு யாருக்காகப் பழிதீர்த்துக்கொண்டிருந்தாரோ அந்த நபர்களான வேதசாட்சிகளாய் மரித்தவர்களைக் குறிப்பிடலாம் (6:10; 16:6; 17:6; 18:24; 19:2). இது வெற்றியைத் தரக்கூடிய இயேசுவின் சொந்த இரத்தத்தைக் குறிப்பிடலாம் (1:5; 5:9; 7:14; 12:11).*[15] *இருப்பினும், இந்த உருவகமானது ஏசாயா 63ல் இருந்த எடுக்கப்பட்டதாகக் காணப்படுகிறது, அவ்வதிகாரம் தேவனை, இஸ்ரவேல் மக்களின் விரோதிகளிடத்தில் தேவன் பழிதீர்த்துக் கொண்டு திரும்புபவராகச் சித்தரிக்கிறது. தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில், "உம்முடைய உடுப்புச் சிவப்பாகவும், உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கிறதென்ன?" என்று கேட்டார் (ஏசாயா 63:2). அதற்குப் பின்வருமாறு பதில் வந்தது,*

> *நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்கொண்டேன் (வசனம் 3).*

இயேசுவின் உடைகளின் மீதிருந்த இரத்தம் என்பது அவரது விரோதிகளின் இரத்தமாய் இருந்தது என்று இது சுட்டிக்காண்பிக்கலாம். [ஆயினும்] வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில், பிற்பாடுள்ள இருவசனங்கள் வரையிலும் திராட்சரச ஆலையில் மிதித்தல் என்பது குறிப்பிடப்படவில்லை, ஆனால் நிகழ்கால (தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கும்) வினைச்சொல் இப்பகுதி முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது: "அவர் நீதியாய் நியாயந்தீர்த்து [தொடர்ந்து நியாயந்தீர்த்து] யுத்தம் பண்ணுகிறார் [தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறார்]" (வசனம் 11) மற்றும் "அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் [தொடர்ந்து மிதிக்கிறார்]" (வசனம் 15ஈ).[16] வெள்ளைக் குதிரையின்மீது ஏறிப் பாய்ந்தோடி வருபவர் புதிதாய்ப் பணிக்கமர்த்தப்பட்டவரல்ல, ஆனால் அவர் யுத்தத் தழும்புகள் நிறைந்த அனுபவஸ்தராவார், அவரது இரத்தக்கறைபடிந்த உடையானது கடந்தகாலப் போராட்டங்களையும் கடந்தகால வெற்றிகளையும் குறித்துச் சாட்சி கொடுக்கிறது.

அடுத்ததாக நாம், "அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே" என்று வாசிக்கின்றோம் (வசனம் 13ஆ). "வசனம்" என்பது *logos* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. இயேசுவானவர், தேவனுடைய வார்த்தையின் நபர்த்துவமாய் இருக்கின்றார்; அவர், தேவன் யாராக இருக்கின்றார் மற்றும் என்னவாக இருக்கின்றார் என்பதற்கான பூரணமான மற்றும் முழுமையான வெளிப்பாடாயிருக்கின்றார் (யோவான் 14:9). "வார்த்தை" என்பது யோவானின் எழுத்துக்களில் இயேசுவைக் குறிப்பதற்கு மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட குறிப்புப் பெயர்களில் ஒன்றாக உள்ளது; புதிய ஏற்பாட்டில், உண்மையில் இந்த அப்போஸ்தலர் மாத்திரமே இயேசுவைக் குறிப்பிடுவதற்கு இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்திய ஒரே எழுத்தாளர் ஆவார் (யோவான் 1:1, 14; 1 யோவான் 1:1).[17]

இயேசு ஒரு சேனையை நடத்துகின்றாரென்று கூறுவதன் மூலம் 14ம் வசனம் இந்தக் காட்சியை விரிவுபடுத்துகிறது: "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்." இந்த சேனையானது கிறிஸ்துவின் மணவாட்டியை (சபையை, கிறிஸ்தவர்களை) கொண்டதாய் இருந்தது என்று பலர் யூகிக்கின்றனர், ஏனெனில் சில வசனங்களுக்கு முன்பு, மணவாட்டிக்கு "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" கொடுக்கப்பட்டு இருந்தது (வசனம் 8). இந்த உடையானது அடிப்படையில் அதைப் போன்றதாக இருந்தது என்பது உண்மையே, ஆனாலும் இது அனேகமாக, அரியணை அறையின் தர அளவுக்குரிய உடையாக இருந்திருக்கலாம் (4:4ஐக் காணவும்).[18] "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய் ..." என்பது தேவனுடைய தூதர்கள் என்பதே பெரிதும் பொருந்தும். வேதவசனங்கள் முழுவதிலும் தூதர்கள், தேவனுடைய பரலோக "சேனை" (படை; யோசுவா 5:14, 15; 1 இராஜாக்கள் 22:19; 1 நாளாகமம் 12:22;

*தானியேல் 7:10; மத்தேயு 26:53 ஆகியவற்றைக் காணவும்) என்றே சித்தரிக்கப்படுகின்றனர். இயேசு தமது பரிசுத்த தூதர்களுடன் வருவார் என்பது எவ்வித மாறுபாடும் இன்றி சித்தரிக்கப்படுகிறது (மத்தேயு 25:31; மாற்கு 8:38; லூக்கா 9:26; 2 தெசலோனிக்கேயர் 1:7).*

*அல்பெர்ட்டஸ் பயட்டெர்ஸ் என்பவர், "கிறிஸ்தவர்கள் பரலோக இளைப்பாறுதலைப் பெற்ற பின், துன்மார்க்கத்தோடு யுத்தம் செய்யத் திரும்பவும் முன்செல்வார்கள் என்று பேசுதல் வேதவசனங்களுக்கு அந்நியமான கருத்தாக உள்ளது"[19] என்று கூறினார். பர்ட்டன் காஃப்பென் என்பவர், தமது விளக்க உரையில் சற்றே நகைச்சுவையைக் கூட்டினார்: "கர்த்தர் தமது ஆடுகளை, ஓநாய்களுக்கு எதிராக அழிக்கும் சக்தியாக இருக்கும்படி ஒருங்கிணைத்தார் என்று ஒருக்காலும் சித்தரிக்கப் படுவதில்லை!"[20]*

*இருப்பினும், சேனையானது பரிசுத்தவான்களைக் கொண்டிருந்ததா அல்லது தூதர்களைக் கொண்டிருந்ததா என்பது சிறிதளவே விளைவை ஏற்படுத்துவதாக இருக்கிறது. வசனத்தைச் சற்றே உற்று நோக்குங்கள், அந்த சேனையானது இயேசுவைப் பின்பற்றுதலைத் தவிர வேறெதுவும் செய்யாததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். லியோன் மோரீஸ் என்பவர், "சேனைகளைக் கொண்டல்ல ஆனால் வசனத்தைக் கொண்டே [இயேசு] மக்களினங்களைத் தாக்குகின்றார் ... சேனைகள் வசனத்திற்குப் பின்னணியாய் இருத்தல் என்பதைத் தவிர வேறெந்தப் பணியும் செய்வதில்லை. அவைகள் பொருத்தமான பணிவாளர் கூட்டமாய் இருந்தனர், ஆனால் அவர் அவர்களைச் சார்ந்திருக்கவில்லை"[21] என்று கூறினார்.*

*இயேசுதாமே தமது விரோதிகளைக் கீழ்ப்படுத்துகின்றார் என்பதை 15ம் வசனம் தெளிவாக்குகிறது: "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்." மூலவசனத்தில், கடைசி இரண்டு சிறப்புப் பெயர்களுக்கு வலியுறுத்தம் தரப்பட்டுள்ளது.[22] வசனமானது "அவர் இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்" மற்றும் "அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" என்று உறுதிப்படுத்துகிறது.*

*15ம் வசனத்தின் அடையாளத்துவம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.[23] துன்மார்க்கரை நியாயந்தீர்க்க, தண்டிக்க மற்றும் அழிப்பதற்காக இயேசு வருகின்றார் என்பதை வலியுறுத்தப் பரிசுத்த ஆவியானர் உருவகத்திற்குமேல் உருவகமாகக் குவிக்கின்றார். ஜார்ஜ் லேடு என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *கிறிஸ்துவைப் பற்றிய இந்தச் சித்தரிப்பானது, புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள பகுதியில் காணப்படும் கிருபையும் இரக்கமும் நிறைந்த*

*கிறிஸ்து என்ற சித்தரிப்பிற்கு நேர்மாறாய் இருக்கிறது என்ற கருத்தைச் சில விளக்கவுரையாளர்கள் பற்றிக்கொண்டுள்ளனர். இது உண்மையல்ல; புதிய ஏற்பாட்டின் எல்லா இடங்களிலும், நியாயத்தீர்ப்பின் மூலம் வெற்றியின் கூறு என்பது கிறிஸ்துவின் மொத்த ஊழியத்திலும் தப்ப இயலாத அம்சமாக உள்ளது. (மத்தேயு 13:41-42; 25:41; ரோமர் 2:5; 2 தெசலோனிக்கேயர் 1:7; 2:8 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.)*[24]

*16ம் வசனம் இந்தக் காட்சியை உச்சநிலைக்குக் கொண்டுவருகிறது: " '**ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா** என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.' " மோசே, "உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரு ... மாயிருக்கிறார்" (உபாகமம் 10:17) என்று இஸ்ரவேல் மக்களிடத்தில் கூறியிருந்தார். தானியேலின் தேவன் "தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரு ... மாயிருக்கிறார்" (தானியேல் 2:47) என்று நேபுகாத்நேச்சார் ஒப்புக்கொண்டிருந்தார். தேவனை "ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்" (1 தீமோத்தேயு 6:15) என்று பவுல் குறிப்பிட்டிருந்தார். வெளிப்படுத்தின விசேஷத்தில், இயேசுவுக்கு இந்தத் தெய்வீகச் சிறப்புப் பெயர் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*[25] *முன்னதாக, 17ம் அதிகாரத்தில், "இவர்கள் [மிருகமும் அதன் கூட்டாளிகளும்] ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்" என்று நாம் வாசித்தோம் (17:14). இப்போது, இந்தத் தரிசனத்தில், இந்தப் பரிசுத்தமான குறிப்புப் பெயரானது "வஸ்திரத்தின் மேலும் அவரது தொடையின்மேலும்" எழுதப்பட்டிருந்தது: இயேசு "ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாய்" இருக்கின்றார்.*

*இந்தப் பெயரானது ஒவ்வொருவராலும் தெளிவாய்க் கண்டு புரிந்துகொள்ளப்படக்கூடிய இடத்தில் இருந்தது.*[26] *இது மனிதர்களின் உரிமைகோருதல்களை மறுதலிக்கிறது: பேரரசர் "இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்," ஆனால் அவர் (பேரரசர்) அவ்வாறு இல்லை. இப்பெயரானது இயேசுவின் மேன்மைத் தன்மையையும் உறுதிப்படுத்துகிறது: அவர் மாத்திரமே ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் இருக்கின்றார். பல தேவர்களும் கர்த்தாக்களும் இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 8:5), ஆனால் அவர்கள் யாவர் மீதும் கர்த்தராக உள்ளவர் ஒருவரே (எபேசியர் 4:5). ஆட்சியாளர்கள் பலர் இருக்கின்றனர், ஆனால் யாவர் மீதும் அரசராக உள்ளவர் ஒருவரே!*

## அவரது வெற்றி நிச்சயமானதாக உள்ளது (19:17, 18)[27]

*17ம் வசனத்தில் கவனக்குவிப்பானது சற்று நேரத்திற்கு, இயேசுவினிடத்திலிருந்து மாறி, "சூரியனில் நின்ற தூதனிடத்திற்கு"*[28] *(வசனம் 17அ) மாறுகிறது, அவ்விடத்தில் அத்தூதனைக் காணமுடிந்தது.*[29]

*செய்தியாளர், "வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளுக்கும்" கேட்கும் வகையில் "சத்தத்தோடே கூப்பிட்டான்" (வசனங்கள் 17ஆ, 18ஈ). "வானத்தின் மத்தியில் பறக்கிற" பறவைகள், பெரிய, பலத்த சிறகுகள் கொண்டவையாகவும், அவற்றில் பல மாம்ச உண்ணிகளாகவும் இருக்கின்றன. அவைகள் தரைக்கு மேல் மிகவும் உயரத்தில் வட்டமிட்டு உணவுக்காக தேடி அலைகின்றன.*

*மாம்ச உண்ணிகளுக்குத் தூதன் ஒரு நல்லசெய்தியைக் கொண்டிருந்தார்: ஒரு புத்தம்புதிய, ஏராளமான உணவு விநியோகம் சமீபமாய் இருந்தது. அவர் பின்வருமாறு சத்தமிட்டுக் கூறினார்,*

> *நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும்,[30] சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின்[31] மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர் [மனிதர்]களெல்லாருடைய[32] மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் (வசனம் 18).*

*எதிர்பார்க்கப்பட்ட காட்சியானது கொடூரமும் பயங்கரமுமானதாக இருக்கிறது: இரத்தம் ஊறிய யுத்தகளத்தில், கண்டதுண்டமான முறிந்துபோன உடல்கள் உயர்ந்து குவிந்து கிடக்க, இறந்தவர்களுடைய உடல்களைப் பறவைகள் கொத்திக் கிழித்துக்கொண்டிருக்கின்றன. நமக்கு இயேசுவின் வார்த்தைகள் நினைவூட்டப்படுகின்றன: "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" (மத்தேயு 24:28). "கோகு மற்றும் மாகோகு" ஆகியோருக்கு எதிரான எசேக்கியேலின் வாய்மொழியும் நமக்கு நினைவூட்டப்படுகிறது (எசேக்கியேல் 38:2). அந்தத் தீர்க்கதரிசிக்குப் பின்வருமாறு கட்டளையிடப்பட்டது,*

> *... நீ சகலவித பட்சிகளையும் வெளியில் இருக்கிற சகல மிருகங்களையும் நோக்கி: நீங்கள் ஏகமாய்க் கூடிக்கொண்டு, ... நான் உங்களுக்காகச் செய்யும் ... மகா யாகத்துக்குச் சுற்றிலுமிருந்து வந்து சேர்ந்து, மாம்சம் தின்று இரத்தங்குடியுங்கள். நீங்கள் பராக்கிரம சாலிகளின் மாம்சத்தைத் தின்று, பூமியினுடைய பிரபுக்களின் இரத்தத்தைக் குடிப்பீர்கள்; ... நான் உங்களுக்காகச் செய்யும் யாகத்திலே நீங்கள் திருப்தியாகுமளவும் கொழுப்பைத் தின்று, வெறியாகுமளவும் இரத்தத்தைக் குடிப்பீர்கள் ... குதிரைகளையும், இரதவீரர்களையும், பராக்கிரமசாலிகளையும், சகல யுத்தவீரர் களையும் தின்று, திருப்தியாவீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு (எசேக்கியேல் 39:17-20).*

*வெளிப்படுத்தின விசேஷம் 19:17, 18ன் அகோரமான விருந்து தேவனால் அளிக்கப்பட்டதால், அது "மகாதேவன் கொடுக்கும் விருந்து" என்று அழைக்கப்பட்டுள்ளது. இந்த "விருந்து" பலவிதமானவர்களைக் கொண்டிருந்தது: அரசர்களும் பலவான்களும், படைத்தளபதிகளும்[33] அவர்களின் படைவீரர்களும், மற்றும் "சுயாதீனர் அடிமைகள், சிறியோர்*

*பெரியோர்'' என்ற நிலையில் இருந்து, தேவனுக்கு எதிராகக் கலகம் செய்திருந்த மற்றவர்களும் இருந்தனர். தண்டனைக்குத் தப்பிப்பதற்கு, அரசர்கள் போதிய அளவுக்கு வல்லமையையோ, பலவான்கள் போதிய அளவுக்கு செல்வாக்கையோ அல்லது படைத்தளபதிகள் போதிய அளவுக்குப் படைவீரர்களையோ கொண்டிருக்கவில்லை. இவர்கள் யாவரும் கர்த்தருக்கு முன்பாக உதவியற்றவர்களாய் இருந்தனர்.*

*சிந்தித்துப் பார்க்கையில், எதிர்பார்க்கப்பட்ட இவ்விருந்தின் பல்வகைத் தன்மை என்பது ஒருவேளை முதலில் காணப்பட்டதுபோல் அவ்வளவு பெரியதாய் இராதிருக்கலாம். டெக்ஸாசின் ஃபோர்ட்வொர்த் என்ற இடத்தில் உள்ள, துரித - உணவு விடுதியொன்று என் நினைவுக்கு வருகிறது. அங்கே மிக விரிவான உணவுப்பட்டியல் அளிக்கப்படுகிறது - ஆனால் (என்னால் கூறமுடிந்த அளவில்) ஒரே விதமான நான்கைந்து பொருட்களே ஒவ்வொரு பதார்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டன. 19:17, 18ல் தோற்கடிக்கப்பட்டவர்கள், அரசர்களாக, படைத்தளபதிகளாக, பலவான்களாக, மாபெரும் மனிதர்களாக இருந்திருக்கலாம், ஆனால் அசுத்தத்தை உண்ணும் பறவைகள், செல்வம் வல்லமை அல்லது பெருமை என்பவற்றைக் குறித்து ஒன்றும் அறிவதில்லை. தளபதியோ சாதாரண போர் வீரனோ, ஒரு குதிரையில் பயணித்த படைத்தளபதியோ அல்லது அவருக்குப் பக்கத்தில் சென்ற வேலைக்காரனோ, எல்லா மனித மாம்சமும் விருந்துண்ணும் பறவைகளுக்கு ஒரேவிதமான ருசியை உடையவை களாகவே இருந்தன.[34] இவ்விதமாக, பெருமையும் சுய - நிறைவும் உடையவர்கள் தாழ்த்தப்படுவார்கள் (நீதிமொழிகள் 16:18).[35]*

*''ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்து'' (வசனம் 9) மற்றும் "தேவன் அளிக்கும் மகா விருந்து" ஆகிய இரண்டிற்கும் இடையில் ஒரு நேர்மாறு இருத்தல் நோக்கங்கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதி.*

> *பத்தொன்பதாம் அதிகாரம், மிகவும் நேர்மாறான இரண்டு காட்சிகளைச் சித்தரித்து, அவையிரண்டும் ஒரே திரையில் இருந்ததுபோல் வரைந்தது - இரண்டு விருந்துகள், ... முதலாவது விருந்து பரலோக வெளிச்சத்தினால் குளிப்பாட்டப்பட்டுள்ளது, ... இன்னொன்று இருளினால் நிழலிடப்பட்டுள்ளது. ஒன்றில் உள்ள விருந்தினர்கள் ... வெள்ளை நிற உடையில் இருந்த திரளான கூட்டத்தினராவர்; இன்னொன்றில் உள்ள விருந்தினர்கள் பிணந்தின்னும் மிருகங்களும் செத்தவற்றைத்தின்னும் பறவைகளு மாகும். ஒன்றில் பரலோக பாடற்குழுவினால் பாடப்பட்ட இசை உள்ளது ... இன்னொன்றில் இசையில்லை, பாடல் இல்லை, எலும்புகளை மெல்லும் சத்தம் மாத்திரம் உள்ளது.[36]*

*''அது வெறுப்பூட்டுவதாக உள்ளது!'' என்று யாரேனும் ஒருவர் மறுப்புரைக்கலாம். ஆம் - ஆனால் அது, நரகத்தைவிட வெறுப்பூட்டுவதாக இருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர், பயங்கரம் நிறைந்த ஒரு சித்திரத்தை வரைகின்றார், ஆனால் "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 9:10).*

*உங்களுக்குத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது: நீங்கள் இயேசுவைப் பின்பற்றி, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டிருக்க முடியும், அல்லது நீங்கள் கர்த்தரை எதிர்த்து நின்று தேவனுடைய மகாவிருந்தில் உணவுப்பதார்த்தமாகக் கூடும்.*

*வரும் "யுத்தத்தின்" விளைவு ஒருபோதும் சந்தேகத்தில் இருந்ததில்லை என்ற உண்மைக்கு விசேஷ கவனம் செலுத்துங்கள். விரோதிகள் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்பாகவே அவர்களது சடலங்களை உண்ணும்படி பறவைகள் அழைக்கப்பட்டிருந்தன. இயேசுவின் வெற்றி நிச்சயமானதாய் இருக்கிறது.*

## *அவரது விரோதிகள் அழிவுக்குரியவர்களாய் இருக்கின்றனர் (19:19-21)*

*கடைசியாக, நமது வசனப்பகுதியின் முதன்மை நோக்கத்திடத்திற்கு வருகின்றோம்: அது, கர்த்தருடைய விரோதிகளில் இருவருடைய வீழ்ச்சியாகும். யோவான், "பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிவரக் கண்டேன்" என்று எழுதினார் (வசனம் 19). "மிருகம்" என்பது 13:1, 2ல் அறிமுகப்படுத்தப்பட்டதான, தோற்கடிக்கப்பட இயலாததாகத் தோன்றிய கடல் மிருகம் ஆகும். (13:4, 7, 8 ஆகிய வசனங்களைக் காணவும்.) மிருகமும் அதன் உடன் வேலையாளும் (நிலத்தில் இருந்து வந்த மிருகமும், இவன் "கள்ளத்தீர்க்கதரிசி"[37] என்றும் அறியப்பட்டிருந்தான் [16:13]) அழிக்கப்படுவார்கள் (19:20); ஆனால் மிருகம் தலைவனாய் இருந்தபடியால், அது மாத்திரம் 19ன் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பின்பற்றாளர்களைப் பட்டியலிட்டுச் சேர்த்தல் என்பது கள்ளத்தீர்க்கதரிசியின் பணியாக இருந்தது (13:12).*

*கிரேக்க வசனமானது, மிருகமும் அதன் சேனைகளும் "குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரோடு யுத்தம்பண்ணுபடிக்குக் கூடிவரக்கண்டேன்" என்றுதான் நேரடி அர்த்தமாகக் கூறுகிறது. முந்திய பாடம் ஒன்றில் சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, இது அடுத்த பாடத்திலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறதான "அர்மகெதோன் யுத்தம்" என்று பரவலாக அறியப்பட்டுள்ளது (20:8).[38] இது 16:13-21ல் குறிப்பிடப்பட்டுள்ள அதே யுத்தம்தான் என்பதை வலியுறுத்துவதற்காக, அதே அடிப்படை யுத்தக் காட்சியை வரைந்து அதற்கு பின்பு இவ்வதிகாரத்தில் இருந்து விசேஷித்த விபரங்களைக் கூட்டும்படி, பிரையன் வாட்ஸ் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொண்டேன்: வெள்ளைக்குதிரையின்மீது ஏறியிருப்பவர், தலைவர்களாக இரண்டு மிருகங்கள், மற்றும் அவைகளுடைய விருந்திற்குக் காத்திருக்கும் பறவைகள். (" 'யுத்தம்' பற்றிய இரண்டாவது விபரம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*மீண்டும் ஒருமுறை, "இந்த மேடை அமைவானது ஒரு எதிர்த்தாக்குதலுக்கென்று அமைக்கப்பட்டு இருந்தாலும், … யுத்தம்*

ஏற்படவே இல்லை'' என்பதைக் கவனியுங்கள்.[39] டொனால்டு குத்ரீ என்பவர், "எந்த யுத்தமும் நடைபெற்றதாக விவரிப்பு எதுவும் இல்லை ... யுத்த வீரரான அரசர், சேனைகளில் பலத்தினால் அல்ல, ஆனுல் அவரது வாயினின்று புறப்பட்ட பட்டயத்தினாலேயே வெற்றிகொள்கின்றார். பேரழிவை ஏற்படுத்த அவரது கட்டளையே போதுமானதாக உள்ளது" என்று சுட்டிக்காண்பித்தார்.[40] பர்ட்டன் காஃப்மென் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இவ்விடத்தில் எவ்வகையான ''யுத்தமும்'' நடைபெறவில்லை. அர்மகெதோன் யுத்தம் என்று அழைக்கப்படுகிற யுத்தமானது, மனிதனின் கற்பனையில் உருவானதேயொழிய வேறொன்றுமில்லை. கிறிஸ்துவுக்கு, தூதர்கள் அல்லது வேறெவரும் கொண்ட சேனைகள் தேவையில்லை. சூரியனை அதன் இடத்தில் சுழற்றிவிடுகிற அவரது வசனம், காலம் வருகிறபோது அவரது சித்தத்தைச் செயல்படுத்தும்.[41]

பெரும்பான்மையான மிரட்டும் நபர்களைப் போலவே, மிருகமும் சரீரப்பிரகாரமாகத் தன்னைவிட பலவீனமாய் இருந்தவர்களை அதட்டி உருட்டியபோது பலம் வாய்ந்ததாகவே தோன்றியது (13:7, 15), ஆனால் அது தன்னைவிட மேலான வலிமையை எதிர்கொண்டபோது நொறுங்கிப்போயிற்று. அதன் முரட்டுத்தனமும் தேவதூஷணமான உரிமை கோருதல்களும் (13:5, 6) ஆட்டுக்குட்டியானவரின் வல்லமைக்கு எதிரே வெறுமையாகிப்போயின.

> அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை[42] வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியும்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே[43] தள்ளப்பட்டார்கள் (வசனம் 20). (''மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

அந்த அக்கினிக்கடலில் ''அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (20:10).

இது "அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல்" பற்றி முதல் குறிப்பிடுதலாக உள்ளது, ஆனால் இது கடைசியானதாயிராது (20:10, 14, 15; 21:8).[44] வெளிப்படுத்தின விசேஷம் "நரகம்" (Gk.: *gehenna*)[45] என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவர், துன்மார்க்கருடைய கடைசி அடைவிடத்தைத் தம் சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு. ''பிசாசுக்கும் அவனது தூதர்களுக்கும் நித்திய அக்கினி ஆயத்தமாக்கப்பட்டுள்ளது'' (மத்தேயு 25:41), மற்றும் சாத்தானைப் பின்பற்றுவதை விடாது பற்றிக்கொண்டிருப்பவர்களும் அங்கு சென்று சேருவார்கள்.

இது எழுதப்பட்ட காலத்தில், இங்கு பயன்படுத்தப்பட்ட அடையாளத்துவம், ரோமப்பேரரசு, அதன் முகவர்கள் மற்றும் அதன்

*கூட்டாளிகள் ஆகியோரின் முடிவு வீழ்ச்சியை முன்னுரைக்கப் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் இந்த உருவகம், "தேவனுக்கும் அவரது ராஜ்யத்திற்கும் எதிராகப் போராட எல்லாக் காலத்திலும் எழும்பும் அப்படிப்பட்ட எல்லா வல்லமைகளின் முடிவை''யும்*[46] *சித்தரிக்கிறது என்பதை நிச்சயமாக எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். "துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படும்" நாள் வரும் (சங்கீதம் 9:17;* KJV).

*இரண்டு விரோதிகளும் அழிக்கப்பட்ட திடீர்த்தன்மையே இவ்வசனப் பகுதியில் மிகவும் அதிர்ச்சியூட்டக்கூடிய அம்சமாக உள்ளது. இது இவ் விபரத்தின் வீரத்தன்மையில் பிரதிபலிக்கப்படுகிறது: "மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும் எவ்வாறு பிடிக்கப்பட்டு, அக்கினியும் கந்தகமும் உள்ள இடத்தில் உயிருடன் தூக்கியெறியப்பட்டனர் என்பதை ... கூறுவதற்கு ஒரு வசனமே போதுமானதாக உள்ளது.''*[47] *மகாபாபிலோனின் வீழ்ச்சியைப் பற்றி நாம் ஏற்கனவே கண்டுள்ளோம் (17 மற்றும் 18ம் அதிகாரங்கள்). (ரோமாபுரி நகரம் என்ற) தலை அழிக்கப்பட்டபோது, (ரோமப்பேரரசு என்ற) உடல் இனியும் உயிர் பிழைத்திருக்க இயலாது. வெற்றி பெற்றதாகத் தோற்றமளித்த வசதித் தன்மையானது, எதிர்த்து நிற்கப்படக்கூடாத மாபெரும் எதிரொளியும்கூடக் கர்த்தரோடு ஒப்பிடப்படும்போது ஒரு குழந்தைபோன்றே இருக்கின்றான் என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக உள்ளது. இரு மிருகங்களுக்கும் "அவற்றின் சிறிய நாள்" தரப்பட்டிருந்தது, ஆனால் அவைகள் தங்களுக்குரிய சரியான இடத்தில் போடப்பட்டுள்ளதை இங்கு நாம் காணுகின்றோம்.*[48]

*நமது வேதவசனப்பகுதியின் கடைசி வசனம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுகிறது: இது மிருகத்தாலும் கள்ளத்தீர்க்கதரிசியாலும் வஞ்சிக்கப் பட்டவர்களுடைய முடிவைக் கூறுகிறது, மற்றும் இது பறவைகளுக்குத் தூதனால் ஏற்படுத்தப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுகிறது: "மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன'' (வசனம் 21).*[49] *வார்ரென் வயர்ஸ்ப் என்பவர் கூறியுள்ளபடி, கர்த்தருடைய விரோதிகள் "அர்மகெதோனை ஒரு யுத்தம் என்ற வகையில் காணலாம், ஆனால் தேவனைப் பொறுத்தமட்டில் அது ஆகாயத்துப் பறவைகளுக்கு ஒரு 'விருந்தாக' மாத்திரம் இருந்தது.''*[50] *இவ்விதமாக, "தேவனுக்கு எதிரான கலகத்தின் மதியற்ற மற்றும் வீணான தன்மை" வலியுறுத்தப்படுகிறது.*[51]

## *முடிவுரை*

*19:11-21ன் உருவகம் நேரடி அர்த்தம் கொண்டதல்ல என்பதைப் புரிந்துகொள்ளப் போதிய அளவு நீண்ட நாட்களாக, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை நீங்கள் படித்திருக்கின்றீர்கள்: கர்த்தருடைய சேனையினரால் சவாரி செய்யப்பட்ட வெள்ளைக்குதிரைகளைக் கட்டி வைப்பதற்குப் பரலோகத்தில் இலாயம் எதுவும் இல்லை, மற்றும்*

துன்மார்க்கருடைய மாம்சத்தைப் பட்சிப்பதற்குப் பசியுள்ள பறவை கூட்டம் எதையும் தேவன் கொண்டிருப்பதில்லை. இவ்வசனப் பகுதியானது, இயேசு தமது விரோதிகள்மீது கொள்ளும் வெற்றியின் அடையாளத்துவமாக உள்ளது. இருப்பினும், இவ்வசனப்பகுதி நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக்கூடாது என்ற உண்மை, இது மும்முரமாய், தீவிரமாய் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்று அர்த்தப்படுவதில்லை. நாம் மிருகத்தைப் பின்பற்ற முடியும் அல்லது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாக இருக்கின்றவரைப் பின்பற்ற முடியும் - மற்றும் அதுதான் மிகவும் மும்முரமான விஷயமாக உள்ளது.

கோயட்ஸ் என்பவரால் வரையப்பட்ட புகழ்பெற்ற சித்திரம் ஒன்றிற்கு, ''மனிதரால் இகழப்பட்டு புறக்கணிக்கப்படுதல்'' என்று தலைப்பிடப்பட்டு, அந்தப் படம், ஒரு சுறுசுறுப்பான நெடுஞ்சாலையின் மத்தியில், முள்முடி சூடியவராய் இயேசு நிற்பதுபோல் சித்தரிக்கிறது:

> அவர் விவரிக்கப்படும் ஒவ்வொரு வகை மக்களாலும் மற்றும் வாழ்வின் நிலையினாலும் சூழப்பட்டுள்ளார்: வேலையாள் தனது கோடாரியுடனும், குதிரைவீரன் தனது பயணச்சவுக்குடனும், தாய் தன் பிள்ளையுடனும், செய்திப்பையன் சமீபத்திய உணர்வெழுச்சிக்குரிய செய்தியைக் கூவுதலுடன் இருந்தனர். ஆனால் சித்திரத்தை இன்னொரு முறை கண்ணோக்குங்கள், அதில் எல்லாக் கண்களும் கிறிஸ்துவைவிட்டு புறம்பே திரும்பியிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்மீது ஒருவர்கூட கவனம் செலுத்தவில்லை. இது உலகத்தின் வழியைப் பற்றிய உண்மையான பிரதிபலிப்பாக உள்ளது.[52]

இயேசு இப்போது புறக்கணிக்கப்பட்டவராய் இருக்கக்கூடும் (யோவான் 12:48). ஆனால் அவர் எப்போதைக்கும் புறக்கணிக்கப் படுபவராய் இருக்கமாட்டார். ஒருநாளிலே அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் எழுச்சியுடன் வருவார்! இன்று அவரைப் புறக்கணிப்பவர்கள் அப்போது அவரால் புறக்கணிக்கப்படுவார்கள். இப்போது அவரை ஏற்றுக்கொள்பவர்கள் அப்போது அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதைக்காட்டிலும் வேறெதுவும் அதிக மும்முரமானதாக/தீவிரமானதாக இருக்க முடியாது![53]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

வேதவசனங்களின் இந்தப் பகுதியை, "Showdown for a Showoff" என்று யாரோ ஒருவர் அழைத்திருக்கின்றார். G. B. கேயர்டு என்பவர் இதற்கு "அழிப்பவனின் அழிவு" என்று தலைப்பிட்டார்.

19:11-21க்கான இன்னொரு அணுகுமுறை பின்வருமாறு: (1) இராஜாவின் பட்டப்பெயர்கள், (2) இராஜாவின் பணிச்சவால், (3) இராஜாவின் வெற்றி.[54] இன்னும் ஒரு அணுகுமுறையும் உள்ளது

*(1) மாபெரும் நடத்துநர், (2) மாபெரும் விருந்து, (3) மாபெரும் வெற்றி.*[55]

*"இரண்டு விருந்துகளுக்கு" இடையிலான நேர்மாறின் மீது ஒரு முழுப்பாடம் கட்டியெழுப்பப்பட முடியும். நமது வசனப்பகுதியில் இயேசுவின் நான்கு பெயர்களாக/பட்டப்பெயர்களாகக் காணப்படுப வற்றின்மீதும் நீங்கள் பிரசங்கிக்க முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]*இது, அவர்கள் வெவ்வேறுபட்ட காலகட்டங்களில் தோற்கடிக்கப்பட்டதாக அர்த்தப்பட வேண்டும் என்று அவசியமில்லை. மாறாக, இது ஒரு உச்சநிலைக் காட்சியைக் கட்டியெழுப்புவதற்கான இறைவெளிப்பாட்டின் வியூகத்துவமாய் இருக்கிறது. 20ம் அதிகாரத்தில் வலுசர்ப்பம் கடைசியாக தோற்கடிக்கப்படுதல் என்பது உச்சக்காட்சியாக உள்ளது.* [2]James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 109. [3]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 177. [4]G. R. Beasley-Murray, *The Book of Revelation,* The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 277. [5]*6ம் அதிகாரத்தில், வெள்ளைக் குதிரையின்மீதேறி வந்தவர் கிறிஸ்துவா அல்லது ஏகாதிபத்தியத்தில் இருந்து வந்த யாரேனுமொருவரா என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் ஏறக்குறைய சமமாகப் பிரிவுபட்டுள்ளனர். ("வெளிப்படுத்தின விசேஷம், 2" புத்தகத்தில், "இடிமுழக்கக் குளம்பொலிகள்" என்ற பாடத்தில் இந்தக் குதிரை வீரன் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.) இருப்பினும், 19:11-21ன் செய்தியைப் பற்றி எட்வர்டு மையர்ஸ் என்பவர் உரைத்தபடி, "இவ்விடத்தில் குறிப்பிடப்பட்ட குதிரை வீரருக்கும் 6ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குதிரை வீரருக்கும் இடையில் ஒற்றுமை உள்ளதா (அல்லது இல்லையா) என்பது பொருட்படுத்தப்படத் தேவையற்றதாக இருக்கிறது"* (*After These Things I Saw: A Study of Revelation* [Joplin, Mo.: College Press Publishing Co., 1997], 309). [6]Barclay, 178. *கர்த்தருடைய சேனைகளும்கூட வெள்ளைக் குதிரைகளிலேயே ஏறி வந்தனர் (வசனம் 14) - இதுவும் வெற்றியைச் சுட்டிக்காண்பித்தது.* [7]*1:5ல் இவர் "உண்மையுள்ள சாட்சி" என்று அழைக்கப்பட்டிருந்தார். "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:5க்கான குறிப்பையும் "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 1" என்ற பாடத்திலும், "தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 2" என்ற பாடத்திலும் உள்ள 3:14க்கான குறிப்புகளை காணவும்.* [8]*மலை உச்சிகள் பற்றிய முதல் விவரிப்பிற்கு "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணவும்.* [9]*2:18ல் இதே சொற்றொடர் காணப்படுகிறது. "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் 1:14க்கான குறிப்புகளையும், "யேசபேலை உறுப்பினராகக் கொண்டிருந்த சபை" என்ற பாடத்தில் 2:18க்கான குறிப்புகளையும் காணவும். இவ்விரு பாடங்களும் "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ளன.* [10]*அருங்காட்சியங்களில், ஒரே கிரீடத்தைப்போலக் காணப்படும் வகையில் பல கிரீடங்கள் ஒன்றுக்குள் ஒன்று பொருத்தி வைக்கப்பட்டுள்ள காட்சியை நான் கண்டிருக்கின்றேன். கிறிஸ்து பல கிரீடங்களைக் கொண்டுள்ளார் என்பதை வலுயுறுத்துவதற்காக நான், இயேசுவின் தலையைச் சுற்றிலும் பல கிரீடங்களை வரையுமாறு பிரையன் வாட்ஸ்ஸிடம் கேட்டுக்கொண்டேன்.*

[11]"Upon Him" என்பது மொழிபெயர்ப்பாளர்களால் சேர்க்கப்பட்டுள்ளது (KJV வேதாகமத்தில் காணவும்); இந்தப் பெயர் எங்கு எழுதப்பட்டிருந்தது என்பதை நாம் அறிவதில்லை. [12]இந்தப் பெயர் என்னவென்று இயேசுவைத் தவிர "வேறு ஒருவரும் அறிவதில்லை" என்று வசனம் தெளிவாகக் கூறியிருக்கும்போது, இந்தப் பெயர் என்ன என்பது பற்றி யூகிப்பதில் விளக்கவுரையாளர்கள் சிலர் தங்கள் புத்தகங்களின் பக்கங்களை வீணடித்துள்ளனர். [13]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishinng Co., 1974), 164. [14]சிலமொழிபெயர்ப்புகளில் "தெளிக்கப்பட்ட" என்றுள்ளது. இவ்விடத்தில் கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் நிச்சயமற்றதாக உள்ளது. [15]இது யாருடைய இரத்தம் என்று அடையாளப்படுத்துதலானது, இவ்வசனப்பகுதியின் அடிப்படைச் செய்திக்கு ஏதொன்றும் செய்ய இயலாததாக உள்ளது, எனவே இது இயேசுவின் இரத்தம் என்று நினைத்துக் கொள்வதில் எனக்கு மறுப்பு எதுவும் இல்லை; ஆனால் இதை இயேசுவின் விரோதிகளினுடைய இரத்தம் என்று அடையாளப்படுத்துதலானது சந்தர்ப்பப்பொருளுக்கும் பழைய ஏற்பாட்டுப் பின்னணிக்கும் நன்கு பொருந்துவதாக உள்ளது. [16]பின்னொரு காலம் வரையிலும் குறிப்பிடப்படாத சில விபரத்தை முன்னெதிர் நோக்குதல் என்பது இறைவெளிப்பாட்டு இலக்கியத்தை பொறுத்தமட்டில் அசாதாரணமானதல்ல. [17]இது அப்போஸ்தலரான யோவானே வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய யோவான் என்பதற்கான இன்னொரு சுட்டிக்காண்பித்தலாக உள்ளது. [18]"பரிசுத்த தூதர்கள்" (மாற்கு 8:38) வெண்மையான/பிரகாசமான உடைகளை அணிந்திருப்பதாகச் சித்தரித்தல் என்பது நியாயமானதாக இருக்கும். இயேசுவின் கல்லறையில் இருந்த இரண்டு தூதர்களும் "பிரகாசமான வஸ்திரம்" தரித்திருந்தனர் (லூக்கா 24:4). [19]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 204. [20]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 451.

[21]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 225. [22]மூல வசனம் இதை இலக்கணரீதியாகச் செய்கிறது: கிரேக்க வினைச்சொற்கள் தாமாகவே ஒரு சிறப்புப் பெயர்ச்சொல்லை (ஆண்பால், பெண்பால் அல்லது பாலற்ற பெயர்) உள்ளடக்குகின்றன. *"Treads"* ["மிதித்தல்"] என்பதற்கான கிரேக்க வார்த்தையானது *(patei)* "he treads" ("அவர் மிதிக்கிறார்") என்றே நேரடியாக அர்த்தப்படுகிறது. வினைச்சொல்லுக்கு முன்பாக ஒரு கிரேக்கச் சிறப்புப்பெயர் சேர்க்கப்படும்போது, இது அந்தச் சிறப்புப் பெயர்ச்சொல்லுக்கு வலியுறுத்தத்தை இடுகிறது. இவ்விஷயத்தில், கிரேக்க மொழியில் *autos* ("அவர்" என்பதற்கான கிரேக்க வடிவம்) *patei* என்றுள்ளது; இவ்விதமாக இந்தச்சொற்றொடர், "*He* treads" ("அவர் மிதிக்கிறார்") என்பதைக் குறிக்கிறது. [23]அவரது வாயிலிருந்து புறப்படுகிற பட்டயம் என்பது பற்றி, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் 1:16க்கான குறிப்புகளையும், அதே புத்தகத்தில் காணப்படும், "இருதயக்கோளாறுடன் இருந்த சபை" என்ற பாடத்தில் 2:12க்கான குறிப்புகளையும் காணவும். கோல் என்பதைப் பொறுத்த மட்டில், "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "யோசேபேலை உறுப்பினராகக் கொண்டிருந்த சபை" என்ற பாடத்தில் 2:26, 27க்கான விளக்கங்களையும் அத்துடன் "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "உங்கள் விரோதியை அறியுங்கள்" பாடத்தில் 12:5க்கான விளக்கங்களையும் காணவும். திராட்சரச ஆலையைப் பொறுத்தமட்டில், "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "அறுவடை நேரம்"

*என்ற பாடத்தில் 14:19, 20க்கான குறிப்புகளைக் காணவும்.* [24]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., *1972), 252.* [25]*பொதுவாகத் தேவனுக்கு நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் சொல்லாக்கமானது, இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற உண்மையானது, இயேசுதாமே தெய்வீகத்துவம் வாய்ந்தவரென்பதற்கு இன்னொரு நிரூபணமாக உள்ளது.* [26]*குதிரையின்மீது ஏறியிருப்பவருடைய தொடை என்பது சிறப்பாகத் தோன்றும் பகுதியாகும், ஆனால் பெயர் இருந்த மிகச்சரியான இடம் நிச்சயமற்றதாக உள்ளது. பெயரானது, தொடையை மூடியிருந்த உடையின் பாகத்தில் இருந்தது என்று சிலர் நம்புகின்றனர். மற்றவர்கள், ''அவரது உடையின்மீதும் மற்றும் அவரது தொடையின்மீதும்'' என்று கூறுகிற கிரேக்க வசனத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றனர். (இவ்விதமாக, பிரையன் வாட்ஸ்ஸின் வரைபடத்தில் நீங்கள், தொடையின்மீதுள்ள உடையின்மீதும் மற்றும் உடையின் முனையின்மீதும் குறிகளைக் காண்பீர்கள்.) இன்னும் மற்றவர்கள், அவரது உடையின் சில பாகங்களில் அல்லது தொடையின் மீதுள்ள பொதுவான ஆயுதங்களில் இந்தப் பெயர் இருப்பதாகக் கருத்துக்கொண்டுள்ளனர்: அவரது அகன்ற இடைக்கச்சு (கச்சை) மீது, அவரது பட்டயத்தின் கைப்பிடியின் மீது அல்லது வேறு எவ்விடத்திலாவது, குறிப்பிட்ட இடத்தில் இது இருந்தது என்பதன்மீதல்ல, ஆனால் அவரது பெயரானது நன்கு தெரியக்கூடியதாகவும் சுலபமாய்க் காணப்படக் கூடியதாகவும் இருந்தது என்ற உண்மையின்மீதுதான் வலியுறுத்தம் உள்ளது.* [27]The second and third main points in this lesson are taken from Michael Wilcock, *I Saw Heaven Opened*: *The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 184-85. [28]*கிரேக்க மொழியில் இவ்விடத்தில் "ஒரு தூதன்" என்றே நேரடி அர்த்தத்தில் உள்ளது.* [29]*சூரியனின் அடையாளத்துவம் என்பது தூதனுடைய செய்தியின் மகிமை மற்றும்/அல்லது முக்கியத்துவம் ஆகியவற்றையும் சுட்டிக்காண்பிக்கலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 1:12; 10:1; 2:1), அல்லது இது அந்தத் தூதன் வெளிச்சத்தின் (பிரகாசமூட்டுதலின்) ஆதார மூலத்தில் இருந்து வந்தார் என்ற உண்மையையும் சுட்டிக்காண்பிக்கலாம். (1 தீமோத்தேயு 6:16; 1 பேதுரு 2:9; 1 யோவான் 1:5 ஆகியவற்றைக் காணவும். மேலும் "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் 7:2க்கான குறிப்புகளைக் காணவும்.)* [30]*மூலவசனத்தில், இவ்வசனம் முழுவதிலும், "மாம்சம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு முன்னதாக திட்டவட்டச் சுட்டுச்சொல்* [''the''] *இல்லை. மேலும், "மாம்சம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது பன்மைச் சொல்லாக உள்ளது. (நேரடி அர்த்தத்தில் இது "மாம்சங்கள்" என்றுள்ளது.) இவ்வார்த்தை "உடல்கள்" அல்லது "பிணங்கள்" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும்.*

[31]*''குதிரைகளின் மாம்சம்'' இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விஷயம் வினோதமானதாக உள்ளது, ஆனால் இது சித்தரிப்பை நிறைவுசெய்தல் என்பதற்கு அப்பால் வேறு எந்தச் சிறப்புக்குறிப்பும் இல்லாததாக இருக்கலாம்.* [32]*''இவ[மனித]ர்கள் எல்லாருடைய'' என்பது சந்தர்ப்பப்பொருளால் தகுதிப் படுத்தப்பட வேண்டும்: "மனிதர்கள் எல்லாருடைய" என்பது, மிருகத்துடன் கூட்டு வைத்துக்கொண்டிருந்தவர்களைக் குறிக்கிறது. இதில் இருந்து, கிறிஸ்தவர்கள் விலக்குப் பெறுவார்கள் என்பது தெளிவு.* [33]*"சேனைத் தலைவர்கள்"* (''captains''; KJV) *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ஆயிரம் பேர்களுக்கு மேல் அதிகாரியாய் இருக்கும் சேனைத் தலைவர்களைக் குறிப்பிடுகிறது.* [34]This sentence and the previous one were adapted from James D. Strauss, *The Seer, the Saviour, and the Saved*, rev. ed., Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1979), 260.

[35]*உடல்கள் புதைக்கப்படாமல் யுத்தக் களத்தில் கிடந்தன என்பது இந்தக் காட்சியின் சிறுமைக்குரிய இன்னொரு அம்சமாகும். "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும், "நீங்கள் மரிக்க விருப்பமாய் இருக்கின்றீர்களா?" என்ற பாடத்தில் இரண்டு சாட்சிகளின் மரணம் மீதான குறிப்புகளைக் காணவும்.* [36]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 105. [37]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "மகா வஞ்சனையாளன்" என்ற பாடத்தில் 13:11-17ன் மீதான குறிப்புகளைக் காணவும்.* [38]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் "ஒருபோதும் இருந்திராத, ஒருபோதும் இராதிருக்கப்போகிற யுத்தம்" என்ற பாடத்தில் காணவும். 19 மற்றும் 20ம் அதிகாரங்களில் உள்ள யுத்தங்கள் இரண்டும் ஒன்றே என்பதற்கான மற்ற ஆதாரம் என்ற வகையில், 19:17, 18ல் உள்ள "மகாதேவனுடைய விருந்து" என்பதன் முன் உதாரணம் எசேக்கியேல் 38, 39ல் காணப்படுவதைக் கவனியுங்கள் - இதே அதிகாரங்கள் 20:8க்கு, "கோகு மற்றும் மாகோகு" என்ற சொற்றொடர்களையும் அளிக்கின்றன.* [39]Beasley-Murray, 278. [40]Donald Guthrie, *The Relevance of John's Apocalpse* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 102.

[41]Coffman, 451. [42]*கள்ளத்தீர்க்கதரிசியைப் பற்றிய இந்த விவரிப்பை, 13:11-17ல் உள்ள மிருகத்தைப் பற்றிய விவரிப்புடன் ஒப்பிடவும்.* [43]*இரண்டு மிருகங்களும், குறிப்பிட்ட இரண்டு கள்ள மனிதர்கள் என்று போதிக்கின்றவர்கள், "உயிரோடே தள்ளப்பட்டார்கள்" என்ற சொற்றொடரை, இவ்வசனப்பகுதி இரண்டு தனிநபர்களைப் பற்றிப் பேசுவதாக இருக்க வேண்டும் என்று நிரூபிக்கப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர். ஆயினும் அடையாளத்துவ இறைவெளிப்பாட்டு மொழிநடையின் சந்தர்ப்பப்பொருளில், இச்சொற்றொடரானது, அவ்விரண்டு மிருகங்களும் தங்களின் அழிவு வரையிலும் கர்த்தரை மும்முரமாய் எதிர்த்துக்கொண்டிருந்தன என்று மாத்திரம் அர்த்தப் படுவதாய் இருக்க வேண்டும்.* [44]*அக்கினி/எரிதல் (17:16; 18:8, 9, 18) மற்றும் கந்தகம் (9:17) ஆகியவை பற்றிய குறிப்புகளை நாம் கண்டுள்ளோம், ஆனால் "கந்தகம் எரிகிற அக்கினிக்கடல்" என்ற குறிப்பை நாம் இதற்கு முன்பு கேள்விப்பட்டதில்லை. "அக்கினிக்கடல்" என்பது பற்றி கலந்துரையாடலுக்கு இப்புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள, "துன்மார்க்கத்தின் முடிவு" என்ற பாடத்தில் 20:10, 14, 15ன் மீதான குறிப்புகளையும், "நியாயத் தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்து உண்மைகள்" என்ற பாடத்தையும் மற்றும்* "Gehenna" *("நரகம்") என்பதைப் பற்றிய துணைப் பாடத்தையும் காணவும்.* [45]KJV *வேதாகமம், வெளிப்படுத்தின விசேஷத்தில், hades என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு* "hell" *என்ற வார்த்தையை நான்கு இடங்களில் பயன்படுத்துகிறது; ஆனால், நாம் முன்னரே கலந்துரையாடியுள்ளபடி, hades என்பது நித்திய ஆக்கினை அடையும் இடத்தை (நரகம்;* Gk.: *gehenna) அல்ல ஆனால் மரித்தவர்கள் இருக்கும் காணப்படாத உலகத்தையே குறிக்கிறது.* [46]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 388. [47]Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1976), 128. [48]Adapted from Morris, 225-26. [49]*"இவர்களும் அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படாதது ஏன்?" என்று யாரேனும் ஒருவர் கேட்கலாம், அவர்கள் தள்ளப்படுவார்கள் (20:15), ஆனால் பிசாசானவன் அந்தக் கடலுக்குள் தள்ளப்படும் உச்சநிலைக் காட்சி வரையிலும் (20:10) அவர்கள் விட்டுவைக்கப்படுவார்கள்.* [50]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 610.

[51]Beasley-Murray, 283. [52]William Hendriksen, *Lectures on the Last Things* (Grand

Rapids, Mich.: Baker Book House, 1951), 63. [53]*நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள், தங்களைக் கர்த்தரிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்புவிப்பிலும் கீழ்ப்படிதலிலும் பதில்செயல் செய்யும்படி அவர்களை ஊக்குவியுங்கள் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:37, 38).* [54]Adapted from Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 96-98. [55]Adapted from John Stacy, *Preaching Through Revelation* (Winona, Miss.: J. C. Choate Publications, 1983), 169-71.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *நமது முந்திய பாடத்தின் வசனப்பகுதியானது, மணவாளன் என்ற வகையில் கிறிஸ்துவின் தோற்றத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தியது. அதற்குப்பதிலாக, அவர் எவ்வாறு தோற்றம் அளிக்கின்றார்?*
2. *19:11-21ஐ ஜாக்கிரதையாக வாசிக்கவும். இவ்வசனங்களில் இருந்து நீங்கள் பெறும் முற்றான மனப்பதிவு என்ன?*
3. *வெளிப்படுத்தின விசேஷத்தில் கர்த்தருடைய நான்கு விரோதிகள் அறிமுகப்படுத்தப்படும் வரிசை முறைமையையும் - தரிசனத்தை விட்டு விலக்கப்படும் வரிசைமுறைமையையும் மறுகண்ணோட்ட மிடவும்.*
4. *இரண்டு மிருகங்களின் வீழ்ச்சியை சித்தரித்தல் என்பதே 19:11-21ன் நோக்கமாக உள்ளது, ஆனால் எதன்மீது (அல்லது யார்மீது) வலியுறுத்தம் வைக்கப்பட்டுள்ளது?*
5. *11, 12, 13 மற்றும் 16 ஆகிய வசனங்களில் காணப்பட்டுள்ளபடி இயேசுவின் நான்கு பெயர்கள்/பட்டப்பெயர்கள் பற்றிக் கலந்துரை யாடவும். ''ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்'' என்ற சொற்றொடருக்கு விசேஷ கவனம் தரவும். ஒவ்வொரு பெயரும்/ பட்டப்பெயரும் இயேசுவைப் பற்றி நமது மதித்தலுக்கு எவ்வாறு பங்காற்றுகின்றன?*
6. *இயேசுவைப் பற்றிய விவரிப்பின் மற்ற விபரங்களைப் பற்றிக் கலந்துரையாடவும். இவற்றில் இப்புத்தகத்தில் முன்னதாகவே காணப்பட்டுள்ள விபரங்கள் யாவை? புதியதாக உள்ளது எது?*
7. *14ம் வசனத்தில் உள்ள சேனையில் இருப்பவர்கள் பரிசுத்தவான்களா அல்லது தூதர்களா என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன? இது ஏதேனும் வேறுபாட்டை ஏற்படுத்துகிறதா?*
8. *19:9ன் விருந்தை 19:17ன் விருந்துடன் நேர்மாறாக ஒப்பிடவும்.*
9. *13ம் அதிகாரத்தை நாம் படித்தபோது இரண்டு மிருகங்களைப் பற்றிக் கூறப்பட்டவற்றை மறுகண்ணோட்டமிடவும்.*
10. *மிருகமும் அதன் சக்திகளும் ஒன்றுகூடி, கர்த்தருக்கும் அவரது சேனைக்கும் எதிராக யுத்தம் செய்ய வந்தன, ஆனால் "யுத்தம்" என்ற*

*வார்த்தையை நாம் சாதாரணமாகப் பயன்படுத்துகின்றபடியாக அதைப் பற்றி வசனம் எதையாவது விவரிக்கிறதா?*

11. *மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோரின் அழிவைக் குறித்துக் கூறுவதற்கு வசனத்தில் எவ்வளவு இடம் பயன்படுத்தப்பட்டுள்ளது? இவ்விபரம் மிகவும் சுருக்கமாக இருப்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?*
12. *"ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாக" இருக்கின்றார் என்ற வகையில் இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஏன் முக்கியமானதாக உள்ளது?*



உண்மையும் சத்தியமுமுள்ளவரான இயேசு வெள்ளைக் குதிரையின்மீதேறி வருதல் (19:11)



*“யுத்தம்” பற்றிய இரண்டாவது விபரம் (19:19-21)*



***மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுதல் (19:20)***